# குழந்தைகளுக்கான கார் இருக்கைக்கு உரிய பாதுகாப்பு

பாதுகாப்பாக தொடங்குதல்

## பின்புறமாக நோக்கியிருத்தல்



ஏறக்குறைய 30 மாதங்கள் வரை வயதுடைய குழந்தைகளுக்கானது

## முன்புறமாக நோக்கியிருத்தல்



இந்த இருக்கை, பின்புறமாக நோக்கியிருக்கும் இருக்கையில் உட்காரக்கூடிய நிலையை கடந்து வளர்ந்துவிட்ட குழந்தைகளுக்கானது.

## உயர்த்தி



இந்த இருக்கை குழந்தையை மேலே உயர்த்துகிறது, இதனால் வயது வந்தோருக்கான இருக்கைபட்டை பொருந்தும்.

## இருக்கை பட்டை



உங்கள் குழந்தை இருக்கை பட்டையைப் பொருத்திக்கொ-ள்ள தயாராகிவிட்டதா என்பதை கண்டறிய 5-படிநிலை பரிசோ-தனையை மேற்கொள்ளவும்.

**குழந்தைகள் அடுத்த இருக்கை நிலையில் அமரும் பக்குவத்தை அடைவதற்கு முன்பு அந்த இருக்கைக்குச் செல்லக்கூடாது என்பது முக்கியமானதாகும். ஏனெனில், இது அவர்களுக்கு கடுமையான காயத்தை ஏற்படுத்தலாம். உங்கள் இருக்கையில் உள்ள தோள்பட்டை அடையாள குறியிடுகளை வழிகாட்டுதலுக்கு எப்போதும் பயன்படுத்தவும்.**

பட்டைகள் தோள்பட்டை உயர அளவாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் இருக்கையில் உள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உயர அடையாள குறியீடுகளோடு ஒப்பிட்டு சரிபார்க்கவும்.

பட்டைகள் திருகிய நிலையில் இல்லை என்பதையும் அவை ஒருவிரல் அகல தளர்வு-டன் உடம்போடு ஒட்டி-க்கொண்டிருக்கின்றன என்பதையும் உறுதி செய்யவும்.



பின்பக்க இணைப்புப் பட்டை சரியான ஆதாரப்புள்ளியில் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யவும்.

அவர்களது முதுகுப்பகுதியும் ஆசன பகுதியும் கார் இருக்கையில் இடைவெளியின்றி ஒட்டி பொருந்தியுள்ளவாறு உங்கள் குழந்தையை உட்கார வைக்கவும்.

இருக்கைபட்டை இறுக்கமாக உள்ளது என்பதை உறுதி செய்ய, கார் இருக்கை-யை நிலையாக உரிய இடத்தில் வைக்கவும்.

மேல்பக்க இணைப்புப் பட்டையானது ஆதாரப்புள்ளியில் பொருந்தியுள்ளது என்பதையும் அது எவ்வித தளர்வுமின்றி இறுக்கமாக இழுக்கப்பட்டுள்ளது என்பதையும் திருகிய நிலையிலோ முறுக்கிய நிலையிலோ இல்லை என்பதையும் சரிபார்க்கவும்

தொழிற்சாலையில் பொருத்தப்பட்ட காரின் குழந்தைக் கட்டுப்பாட்டு ஆதாரப்புள்ளியைக் கண்டுபிடித்து (உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், கார் கையேட்டைப் பார்க்கவும்), உங்கள் காரின் சரியான ஆதாரப் புள்ளியை தான் நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதி செய்யவும்.


*வழங்குவது* ROAD SAFETY EDUCATION VICTORIA · Starting Out Safely · EARLY LEARNING ASSOCIATION AUSTRALIA · VICTORIA State Government

# குழந்தைகளுக்கான கார் இருக்கைக்கு உரிய பாதுகாப்பு

அனைத்துவித குழந்தைகளுக்கான கார் இருக்கைகளுக்கும், சூழுறைகளுக்கும், இணைப்புப் பட்டை நேராக இருக்க வேண்டும். ஆதாரப்புள்ளியை எட்டுவதற்கு ஒரு நீட்டிப்பு இணைப்புப் பட்டை உங்களுக்குத் தேவைப்படலாம்.

மேலும், உங்கள் இருக்கை ஒரு ஸ்டேபிலைசர் கம்பத்தை உள்ளடக்கியிருந்தால், அந்த இருக்கை பின் நோக்கிய நிலையில் இருக்கும் போது அதை பயன்படுத்துமாறு கவனிக்கவும்.


இருக்கைபட்டை அல்லது ஐசோஃபிக்ஸ் இணைப்பிகள் என இவற்றில் ஏதோ ஒன்றை பயன்படுத்துங்கள்.




குழந்தைகள் இருக்கைக்கான சரியான ஆதாரப் புள்ளியை நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்பதை உறுதி செய்யவும்.

சரியான ஒன்றைக் கண்டுபிடிப்பதற்கு உங்கள் கார் கையேட்டைப் பயன்படுத்தவும்.

## அணுகுமுறை புள்ளிகள்




இருக்கையானது **AS/NZS 1754** என்பதைக் காண்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆஸ்திரேலிய தரநிர்ணய ஒட்டுப்படத்தினையும், குறியிடுதலையும் கொண்டுள்ளது என்பதை உறுதி செய்யவும். அந்த ஒட்டுப்படங்களை **சேதப்படுத்தவோ அல்லது நீக்கவோ** கூடாது. பொருத்தமான ஒட்டுப்படங்கள் இல்லாத இருக்கைகளைப் பயன்படுத்தக் கூடாது.




குழந்தை உயர்த்தி இருக்கையிலிருந்து ஒரு குழந்தையை இட மாற்றம் செய்வதற்கு முன்பு, **அவர்கள் இச்சோதனையின் 5 படிநிலைகள் அனைத்தையும் பூர்த்தி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தவும்.**

அவர்கள் இந்த 5 படிநிலைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யவில்லையென்றால், அவர்கள் உயர்த்தி இருக்கையிலேயே இருக்க வேண்டும்.

ஏறக்குறைய 145 செ.மீ.-ல் இது காணப்படும்.

## ஐந்து படிநிலை பரிசோதனை




1. முதுகுப்புறம் வாகன இருக்கையில் சாய்ந்திருத்தல்
2. இருக்கையின் முனையில் முட்டிகள் மடங்கியிருத்தல்
3. மடிப்பட்டைகள் தொடைகளின் மேற்புறம் மீது தாழ்ந்திருத்தல்
4. தோள்பட்டை பட்டையானது தோள்பட்டையின் நடுவில் குறுக்காக இருத்தல்
5. பயண நேரம் முழுவதும் இந்த நிலையிலேயே இருக்க முடியும்.

குழந்தைகள் உட்காருவதற்கு மிகவும் பாதுகாப்பான இடம் என்பது பின்புற இருக்கைகள் ஆகும் 12 வயதிலிருந்து, 145 செ.மீ.-க்கு மேல் உயரம் உள்ள குழந்தைகள் முன்பக்க இருக்கையில் உட்காரலாம்.

செயல்பாட்டில் உள்ள காற்றுப்பை பொருத்தப்பட்ட வாகனங்களில் பின்புறமாக நோக்கியிருக்கும் இருக்கைகளை ஒரு போதும் பொருத்தாதீர்கள்.



**மேலும் விவரங்களுக்கு ELAA-வின் பாதுகாப்பாக தொடங்குதல் இணையதளத்திற்கு செல்லுங்கள். www.childroadsafety.org.au**